# நல்லூர் பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவில் இரு இயக்கத்திடையில் நடந்த துப்பாக்கி சமர்

Registered as a Newspaper in Sri Lanka

# ஈழமுரசு

முரசு 17-11-8? ஞாயிற்றுக்கிழமை (கார்த்திகை 2 ரபியு அவ் 4) முழக்கம் 282

## ரெலோ விடுத்துள்ள அறிக்கை

நேற்று முன்தினமிரவு நல்லூர் பகுதியில் இடம்பெற்ற இரு இயக்கங்களுக்கிடையேயான துப்பாக்கிச் சமர் தொடர்பாக தமிழ் ஈழவிடுதலை இயக்கம் (ரெலோ) பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையின் விபரம் வருமாறு;-

"தமிழீழப் போராட்டமானது சர்வதேச ஏகாதிபத்தியங்களினதும் அதன் அடிவருடிகளினதும் கைகளில் சிக்குண்டு மீட்சியுறத் தவிக்கும் இவ்வேளையில் தமிழ் ஈழ தேசிய விடுதலைப் போராட்டத்தை மக்கள் ஆதரவுடன் செவ்வனே நடாத்த வேண்டிய விடுதலை அமைப்புக்கள் தமது சுய தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு சில பல அராஜக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. இந்நிலை தொடரும் பட்சத்தில் தமிழ் பேசும் மக்களுக்கும் விடுதலை அமைப்புகளுக்குமிடையிலான இடைவெளியானது மென்மேலும் விரிவடையுமேயொழிய ஐக்கியமேற்படுமா என்பது சந்தேகமே. இந்நிலைகளை தவிர்க்கும் பொருட்டு கூட்டுநடவடிக்கைகட்கு பிற விடுதலை ஸ்தாபனங்களை அணுகியிருந்தோம். ஆனல் மக்களால் மக்களுக்காக என பிதற்றிக் கொள்ளும் ஸ்தாபனங்கள் மக்களுக்கு ஏற்படும் ...12ம் பக்கம் பார்க்க

★ மட்டுநகரில் மூன்று மின்கம்ப மரணங்களைப் பார்வையிடச் சென்ற

# 4 பொலிஸ் கண்ணிவெடிக்கு பலி

# ஒன்பது தமிழர் சுட்டுக் கொலை

## கடைகள் வீடுகள் தீமூட்டி எரிக்கப்பட்டன மேலும் இரு பொலிஸாருக்குப் படுகாயம்

(மட்டுநகர்)

மட்டுநகர் பார் வீதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற கண்ணி வெடித்தாக்குதலொன்றில் நான்கு பொலிஸார் ஸ்தலத்தில் மரணமானதைத் தொடர்ந்து ஆயுதப்படையினர் மேற்கொண்ட சரமாரியான துப்பாக்கிப் பிரயோகத்தினுல் மரணமான கிராமசேவகர் ஒருவர் உட்பட ஒன்பது தமிழரின் சடலங்கள் நேற்று மாலைவரை மட்டுநகர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டன. இச்செய்தி அச்சுக்குப்போகும் போது ஆறு சடலங்கள் அடையாளம் காணப்பட்டன.

அதேவேளையில் மாமாங்கம் வீதி, விமான நிலைய வீதி ஆகிய பகுதிகள் தீ மூட்டப்பட்டதால் ஒரே புகை மண்டலமாகக் காட்சியளித்ததாகவும் பல கடைகளும், வீடுகளும், மரக்காலையொன்றும் முற்ருக எரிந்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனுல் பல லட்சக்கணக்கான ரூபா பெறுமதியான உடமைகள் கருகியிருக்கலாமென பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

நேற்றுக்காலை மட்டுநகர் பஸ் நிலையத்தில் ஒருவருக்கும் தொலைபேசிப் பரிவர்த்தனை அலுவலகத்துக்கு அருகில் இருவருக்கும் மின்கம்ப மரண தண் ...12ஆம் பக்கம் பார்க்க

### அடகு கடையில் கொள்ளை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரிலுள்ள தனியார் அடைவுக்கடையொ —12ஆம் பக்கம் பார்க்க

### தொண்டமான் பேச்சு:

## சகல தமிழர் குழுக்களும் பயங்கரவாதிகள் அல்லர்

தமிழர் குழுக்கள் எல்லாவற்றையும் பயங்கரவாதிகள் என்று கூறமுடியாது. சிறு குழுவினர் மாத்திரமே இவ்வாறன செயல்களில் ஈடுபடுகிறார்கள் என்று கிராமிய கைத்தொழில் அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற மஹாபொல வைபவம் ஒன்றில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் தொண்டமான் இவ்வாறு கூறினுர்.

தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி இங்கு உரையாற்றுகையில், இனப்பிரச்சினைக்கு ...12ஆம் பக்கம் பார்க்க

### யாசிர் அரபாத் இந்தியாவில்

(புதுடில்லி)

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவர் யாசிர் அர ...12ம் பக்கம் பார்க்க

### நேற்று கொழும்பு ரயில் வரவில்லை

## வடபகுதி ரயில் சேவைகள் நேரசூசிகை திடீர் மாற்றம்

வடபகுதிக்கான ரயில் சேவைகளின் நேரங்களில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு கோட்டைக்கான 'இன்ரசிற்றி' ரயில் சேவை இனிமேல் ஞாயிறு, செவ்வாய், வியாழன் ஆகிய தினங்களில் மட்டுமே நடைபெறும். இத்தினங்களில் காலை 6-50க்கு காங்கேசன்துறையிலிருந்து புறப்படும் இன்ரசிற்றி நண்பகல் ...12ஆம் பக்கம் பார்க்க

★ சென்னை விமானநிலைய பேட்டியில் பிரதமர் ராஜீவ்

## தமது கோரிக்கையை தமிழீழ குழுக்கள் தெரிவிக்க வேண்டும்

(சென்னை)

தமிழீழ விடுதலை இயக்கங்கள் தமது நியாயமான கோரிக்கைகளை இணக்கப் பேச்சுவார்த்தையை தொடருவதற்கு வசதியாகச் சமர்ப்பிக்க வேண்டுமென்று பிரதமர் ராஜீவ் காந்தி நேற்று முன்தினம் சென்னை விமான நிலையத்தில் பத்திரிகையாளர்கள் கேட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

"இந்திய அரசு இலங்கை அரசின் பக்கம் சார்ந்து நடந்து கொள்வதாகச் சிலர் ...12ஆம் பக்கம் பார்க்க

### பல்கலைக்கழக பரீட்சைகள்

நேற்று முன்தினம் நடைபெறவிருந்த யாழ். பல்கலைக் —12ம் பக்கம் பார்க்க

### விடுவிக்குமாறு அரச அதிபர் வேண்டுகோள்

## வவுனியாவில்பௌத்தபிக்கு சிங்கள ஆசிரியர் கடத்தல்

(வவுனியா)

வவுனியாப் பகுதியிலிருந்து சிங்கள ஆசிரியர் ஒருவரும், அவரைச் சார்ந்த ஆறு குடும்பங்களும், பௌத்தபிக்கு ஒருவரும் இனம் தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொக்குவெளிக் கிராமத்திலிருந்து இவர்கள் ஆயுதமுனை ...12ஆம் பக்கம் பார்க்க

## முள்ளியவளையில் இருபது அகதி இளைஞர் கைது வயோதிபப் பெண் படையினர் சுட்டதால் பலி

(முல்லைத்தீவு)

முள்ளியவளைப் பகுதியில் ஆயுதப் படையினர் நடத்திய திடீர் முற்றுகையின் போது தண்ணீரூற்று அகதிகள் முகாமிலிருந்த இருபது இளைஞர்கள் கைது செய்யப்பட்டுக் கொண்டுசெல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆயுதப் படையினர் முதலில் வீதியில் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தினுல் தங்கப்பதியாள் (65) என்ற வயோதிபப் பெண் ஸ்தலத்திலேயே மரணமானுர். இராசமணி (45) என்ற மற்றொரு பெண் படுகாயமடைந்து முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் வீதியில் நிலக்கண்ணிவெடி வெடித்து நான்கு இராணுவத்தினர் காயமடைந்ததைத் தொடர்ந்தே இத்தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது. ...12ஆம் பக்கம் பார்க்க

### இன்று

### ஆலாலு, தர்மர் அஞ்சலி கூட்டம்

மறைந்த முன்னுள் பாராளுமன்ற உறுப்பினர்களும், கூட் —12ஆம் பக்கம் பார்க்க

## 2 வாரத்தில் 4 குழந்தைகள் அகதிகள் முகாமில் மரணம்

(கல்வியங்காடு)

நல்லூர் சங்கிலியன் புனர்வாழ்வுக் கழகத்தினரின் அகதிகள் முகாமில் இருந்த நான்கு குழந்தைகள் இரத்தப் புற்றுநோய், நிமோனியா, வயிற்றுளைவு, சின்னமுத்து, வயிற்றோட்டம் ஆகிய நோயினுல் பீடிக்கப்பட்டு அடுத்தடுத்து பரிதாப ...12ஆம் பக்கம் பார்க்க

national weekly வாரமலர் விலை: ரூபா இரண்டு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மலசல கூடம் அமைத்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் மலசல கூடம் அமைப்பதற்கு தகுதிவாய்ந்த கட்டட ஒப்பந்தக்காரரிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன விண்ணப்பப் படிவங்கள், அளவுகள், மாதிரிப் படிவங்கள் போன்ற விபரங்களை, பல்கலைக்கழக நிதியாளரிடமிருந்து 20. 11. 85 ம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ள முடியும். விபரங்களுக்கான, வேண்டுகோளுடன், ரூ. 100/-க்கான, தபாற்கட்டளை / காசுக்கட்டளை, அனுப்பப்படவேண்டும். கேள்விகள் விண்ணப்பிப்பதற்கான, முடிவுதிகதி 02. 12. 85 முற்பகல் ,10.00 மணியாகும். விண்ணப்பக்கடித உறையின், இடதுபுற மேல் மூலையில் UJ/F/SK/07/02/12/85 என்ற இலக்கம் குறிக்கப்படவேண்டும்.

— பதிவாளர்.


# LONDON EXAMS.

May/June '86ல் நடக்கவிருக்கும் பரீட்சைக்கான Week end Classes பின்வரும் திகதிகளில் ஆரம்பமாகும்.

| | | | |
|---|---|---|---|
| ICMA Section | | A | 30.11 85 |
| | | B | 30 11.85 |
| | Part | I | 30 11 85 |
| IDPM | Part | I | 30 II 85 |
| IAA | Part | I | 30 II 85 |
| IAB | Foundation | | 30 II.85 |
| | Inter | | 14.12 85 |
| | Final | | 14 12 85 |

Note: Student registration with the London Institutes will be done by us.

**CANTABIA INSTITUTE**
(Shoot of Oxonia, Colombo)
21, MAIN STREET, JAFFNA.
Phone: 24201



## வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு

தொழிலொன்றுடன் வெளிநாடு செல்லுங்கள். உங்கள் தகுதிக்கேற்ப 30 நாடுகளில் 70க்கு மேற்பட்ட பல்வேறு தொழில்கள் (JOB CATEGORIES) உயர் தொழில் முதல் கூலிவேலை வரை ஆண்களும் பெண்களும் இலவச விமானச் சீட்டு, தங்குமிட வசதி, கட்டணம் எதுவுமில்லை. விபரங்கள் அடங்கிய கைநூல் ஒன்றைப் பெற்றுக்கொள்ள சுயவிலாசமிட்ட ரூபா 3-50 முத்திரை ஒட்டிய நீண்ட தபாலுறை முதலில் அனுப்புக. நேரில் வர வேண்டாம்.

**Foreign Assignments**
CHUNNAKAM.


## உதைபந்தாட்ட முடிவுகள்

(நல்லூர்)

யாழ். பரி-யோவான் கல்லூரியின் முதலாம் பிரிவு உதைபந்தாட்டக் குழுவிற்கும் கல்லூரியின் பழைய மாணவர் குழுவிற்குமிடையே பரி யோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப்போட்டியில் 2 : 1 கோல்களால் பழைய மாணவர் கோஷ்டி வெற்றி பெற்றது. ஆசிரியர் திரு. என். எஸ். தனபாலன் மத்தியஸ்தம் வகித்தார்.

கைதடி நவீல்ட் பாடசாலை மாணவர் குழுவிற்கும், பரி-யோவான் கல்லூரி விடுதி மாணவர் தெரிவுக் குழுவிற்குமிடையே பரி-யோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப்போட்டியில் 2 : 1 கோல்களால் நவீல்ட் பாடசாலைக் கோஷ்டி வெற்றி பெற்றது.

## சமூக சேவையாளர் வைத்திலிங்கம் மறைவு



முன்னாள் வவுனியா நிறைவேற்று பொறியியலாளரும், யாழ். மாநகரசபை பொறியியலாளரும், பிரபல சமூக சேவகருமான இளையதம்பி வைத்திலிங்கம் 14-11-85 அன்று காலமானார்.

இவர் நல்லூர் கந்தசுவாமி கோவில், நயினை நாகபூஷணி அம்மன் கோவில் கோபுர முகப்பு மண்டப வேலை, மற்றும் ஆலய திருப்பணிகளில் முன்னின்று உழைத்தவர். திவ்ய ஜீவன சங்க - யாழ். கிளையின் ஓர் முன்னோடி உறுப்பினர், அத்துடன் பல சமய, சமூகவிடயங்களில், அயராது பணியாற்றிய ஓர் சமூகசேவகரும் ஆவார்.

## ★ பிறந்தநாள் வாழ்த்து ★

✻ கரவெட்டி, அஞ்சலக வீதி தவராஜா - டெய்சி தம்பதியின் மகன் மேர்வின் ஸ்ரான்லி இன்று தனது எட்டாவது பிறந்தநாளை கொண்டாடுகிறார்.

✻ சங்கானை கிழக்கு செல்வராசா - பரிமளம் தம்பதியின் மகள் தர்சிகா இன்று தனது முதலாவது பிறந்தநாளை கொண்டாடுகிறார்.

✻ பாஷையூர் பீற்றர் - செல்லக்கிளி தம்பதியின் மகன் மணிவண்ணன் இன்று தனது ஏழாவது பிறந்தநாளை கொண்டாடுகிறார்.

✻ அரியாலை கனகசிங்கம் - சந்திரவதனு தம்பதியின் மகன் கமலன் இன்று தனது ஐந்தாவது பிறந்தநாளை கொண்டாடுகிறார்.

✻ வதிரி சிவநேசன் - சந்திராதேவி தம்பதியின் மகன் சாந்தநேசன் இன்று தனது முதலாவது பிறந்தநாளை கொண்டாடுகிறார்.

# வரி விளம்பரம்

### அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு ஒத்திவைப்பு

கோப்பாய் புதிய கிராம எழுச்சித் திட்டத்திற்காக, 17-11-1985 இல் அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருந்த சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணங்களால் 01-01-1986 திகதிக்கு மாற்றஞ் செய்யப்பட்டுள்ளதாக அறியத் தருகின்றோம். நிர்வாகிகள்.

### மணமகள் தேவை

யாழ். இந்து உயர்குல கோவியர் இனத்தைச் சேர்ந்த மேற்கு ஜேர்மனியில் வேலை பார்த்த, செவ்வாய் தோஷமற்ற 1-1-1959 இல் பிறந்த ஆரோக்கியமான மணமகனுக்கு 19 வயதுக்குட்பட்ட 4:5 5:4 எண்ணுடைய, 5, 23, 31-ம் திகதியில் பிறந்த மணமகளை எதிர்பார்க்கிறார். அழகான மெல்லிய தோற்றமுடைய மணமகள் தேவை. கிறீஸ்தவ சமயத்தவரும் விண்ணப்பிக்கலாம் அண்மையில் எடுத்த படத்துடனும், முழு விபரங்களுடனும் தொடர்பு கொள்ளவும் விபரங்கள் இரகசியமாக வைக்கப்படும்.

ஸ்ரீ மாவை விநாயகர் மங்கள ஏஜன்ஸி, கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை. கிளை : 52/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


### திருமண சேவை

மணமகன், மணமகள் தேவையானோர் டாக்டர், என்ஜினியர், அக்கவுண்டன்ட் எவராய் இருந்தாலும் சிறந்த முறையில் மு. நாகலிங்கம் என்பவரால் பொருத்தம் பார்த்துத் தரப்படும். கைரேகை, குறிப்பெழுதல், எண் சோதிடப் பலன் சொல்லுதல் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும். நேரடியாகவோ, தபால் மூலமோ செய்து தரப்படும்.

சிவகுரு மனோகரன்,
திருமணக் காரியாலயம்,
சிவன் கோவிலடி,
சாவகச்சேரி.


### கந்தசஷ்டி

(நயினாதீவு)

நயினாதீவு அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணியம்மன் ஆலயத்திலும் காட்டுக் கந்தசாமி கோவிலிலும் கந்தசஷ்டி உற்சவம் வழமைபோல இவ்வாண்டும் ஆரம்பமாகியுள்ளது. இன்று ஞாயிற்றுக்கிழமை இரு கோவில்களிலும சூரன்போர் நடைபெறும். மறு நாள் திருக்கல்யாண உற்சவத்துடன் விழா நிறைவுறும்.

ஸ்ரீ நாகபூஷணியம்மன் ஆலயத்திற்கு இம்முறை புதிய சூரன் ஒன்று சிற்பாசாரியர்களால் உருவாக்கப்பட்டுள்ளதென்பது குறிப்பிடத்தக்கது.


## தொழிற் பயிற்சி

★ **COMPUTER PROGRAMMING BASIC — COBOL**

COBOL படிக்க விரும்புவோர் வேறு Computer Language படித்திருத்தல் வேண்டும்.

காலம்: 3 மாதம் கட்டணம்: ரூ. 1000/=

★ ரெலிவிஷன், வீடியோ டெக் றிப்பியறிங் சகல இன றேடியோ, ரெலிவிஷன், வீடியோ டெக் திருத்தும்முறை பயிற்சியளிக்கப்படும்.

★ எலக்ரிக்கல் வயறிங்
★ வெல்டிங்
★ மோட்டர் றீவைண்டிங்
★ Diploma in Hotel Management
★ French, German Language

ஆகியன பயிற்சியளிக்கப்படும்.

வெளிநாடுகளில் வேலை செய்வதற்கு அல்லது மேல்படிப்பு படிக்க விரும்புவோருக்கு அரிய சந்தர்ப்பம்.

ஆரம்பம் 20-11-85

விபரங்களுக்கு:

**JAFFNA TECHNICAL INSTITUTE**

52/1, ஸ்ரான்லி வீதி, (றெயில்வே கடவையருகாமை) யாழ்ப்பாணம்:

141, கண்டி வீதி, (யூனியன் பேக்கறியருகாமை) சாவகச்சேரி.

பெற்றோல் செற்முன்வீதி, (விக்கினேஸ்வரா கல்லூரி வீதி) நெல்லியடி, கரவெட்டி.



## விசேட அறிவித்தல்

இலங்கைப் பல்கலைக்கழகங்களின்
வெளிவாரிப்பட்டமாணிப் பரீட்சைகள்
கல்வியாண்டு 86/87 க்குரிய
விண்ணப்ப முடிவு திகதி நீடிக்கப்பட்டுள்ளது

❋ கலைமாணி ❋ வர்த்தகமாணி
❋ விஞ்ஞானமாணி (கணிதம்) ❋ சட்டமாணி

ஆகிய பாடநெறிப் பயிற்சிக்கான விண்ணப்பப் படிவங்களையும், விபரத்திரட்டினையும் 30-11-85 வரை பெற்றுக்கொள்ளலாம்.

க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் மேற்குறிப்பிட்ட பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

**விசேட சலுகை :**

க. பொ. த. உயர்தரப் பரீட்சை (85 ஒகஸ்ட்) எடுத்த முடிவுகளை எதிர்நோக்கியிருக்கும் மாணவர்களுக்கு பரீட்சை முடிவுகள் கிடைக்கும் வரை பயிற்சி வகுப்புகளில் இலவசமாக பங்குபெற வசதியளிக்கப்படும். பரீட்சை முடிவுகளை எதிர்நோக்கியிருக்கும் மாணவர்கள் அதற்குரிய அத்தாட்சியுடன் விண்ணப்பிக்கவும்,

பயிற்சிக்கான விண்ணப்பப்படிவத்தினையும் விபரத்திரட்டினையும் பதிவாளர், அஸ்ரன் இன்ஸ்ரியூட், என்ற பெயருக்கு ரூபா 10/=ற்கான காசுக்கட்டளையுடன் 9''X6'' அளவுடைய சுயமுகவரியிட்ட முத்திரை ஒட்டப்பட்ட தபால் உறையை அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவங்களை நேரிலும் பெற்றுக்கொள்ளலாம்.

**REGISTRAR**
**ASTAN INSTITUTE**
166/1, Hospital Road, JAFFNA.

## சோறு...

8ஆம் பக்கத் தொடர்

தல்' என்றும் கூறுவர். இச்சந்தர்ப்பத்தில் தலைப்பந்தி, இரண்டாம்பந்தி, மூன்றும் பந்தியென்ற ஒழுங்கு நிலையுமிருந்தது. தலைப்பந்தியிலே ஆண்வீட்டார் இடம் பெறுவர். இரண்டாம் பந்தியில் துடக்கு உரித்துக்காரர் உணவுகொள்வர் மூன்றும். பந்தியில் ஏனைய உற்ருர், நண்பர், சமூகத்தவர் இடம் பெறுவர். சபையில் உணவு அருந்து முன்பு கைகளை அலம்பவேண்டும் என்ற நியதி இருந்தது. முதலிற் செம்புபெறுபவர் முக்கியமானவராக முதியவராக இருப்பார். சிறப்பாக மணமகனின் தந்தைவழிப் பேரனுக்கே இம்முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. குடும்பப்பூசல்கள் உருவாகும் வேளைகளில் "சோந்து உணவு கொள்ளமாட்டேன்" என பதைக்குறிக்க 'செம்புத்தண்ணியும் எடுக்கமாட்டேன்' என்று கூறும் வழக்கம் தற்போது உண்டு, இது உணவுப் பழக்கத்தின் முக்கிய அம்சமாக அது அமைந்ததையே உணர்த்துகின்றது. பிற்காலத்திலே சாதித்தொடர்பினை விளக்கும் ஓரம்சமாகவும் இது நிலைபெற்று விட்டது.

உணவைப் பரிமாறும் போதும் சில ஒழுங்குமுறை கடைப்பிடிக்கப்பட்டது. முதவில் கறிவகைகளைப்பரிமாறிய பின்பே சோற்றைப் பரிமாறுவர். காரமற்ற கறிகள் முதலிலும் அடுத்துக் காரமான குழம்பும் தயிரும் இறுதியில் சொதியும் பரிமாறப்படும். சொதி பரிமாறிஞல் உணவு உண்ணும் இறுதிக் கட்டடம் என்பதை எல்லோரும் அறிவர். அதஞல் சொதிக்கு "ஆளெழுப்பி" என்ற பெயர் தரும்வழக்கிலிருந்து. திருமணப் பந்தியிலே பாகற்காயைத் தவிர்த்தனர். 'பத்துக் கறியும் பாங்கான பச்சடிகளும்' என திருமண உணவு பற்றிய வர்ணனையொன்று கிராம மக்களிடையே வழக்கிலுண்டு. இது விசேட நிலையில் உணவு வகைகள் பற்றிய குறிப்பாகவும் விளங்குகின்றது.

இறப்பின் போது உணவுப் பழக்கத்தில் மூன்று நிலைகளில் உணவுப் பழக்கங்களை அவதானிக்க முடிகிறது காடாத்துச்சமையல், எட்டுச்சமையல், அந்திரட்டிச் சமையல் என்ற மூன்று வகையான சமையற் பெயர்களும் இதனையே விளக்குகின்றன எனலாம். இறந்த உடலைத் தகனம் செய்து சாம்பரை நீர் நிலைகளில் கரைக்கும் நிகழ்ச்சி "காடாத்து" எனப்படும். இதனைப் "பால் தெளித்தல்" என்றும் கூறுவர். உடலைத் தகனஞ் செய்த இடத்தில் பால் ஊற்றப்படுவதால் இப் பெயர் வந்தது. "காடு மாற்றுதல்" என்ற வழக்கும் உண்டு.

பழைய காலத்திலே 'சுடுகாடு' எனப் பிரத்தியேகமான இடம் இறந்த உடல்களைத் தகனஞ் செய்வதற்கு ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை பயிர்செய் நிலங்களிலேயே உடலை தகனம் செய்தனர். எலும்புகளையும் சாம்பரையும் கடலிலே கலந்துவிட்டனர். எரித்த இடத்திலே பசுலையும் நீரையும் ஊற்றி நவதானியங்களை விதைத்து சுடுகாட்டை மாற்றி நிலத்தை மீண்டும் பயிரிடுவதற்கேற்ற நன்காடாக மாற்றினர். இதனாலேயே 'காடுமாற்றல்' 'காடு ஆற்றுதல்' போன்ற வழக்குகள் தோன்றின. காடாத்து நிகழ்வின் பின்னர் இறப்பு நிகழ்ந்த வீட்டிலே நடைபெறும் சமயல் 'காடாத்துச் சமையலாகும். 'மிகவும் எளிய உணவே தயாரிக்கப்படும். சோறு இரண்டொரு கறிகளும்சமைத்து இறந்தவருக்கு நிவேதிப்பர். இச் சமையலில் சுவைகூட்டும் தாளிதம் தவிர்க்கப்பட்டது. துக்கநிலையிலே இது நடைபெற்றிருக்க வேண்டும் பின்னர் நடைமுறையாகி இருக்கலாம்;

எட்டாம் நாள் இறந்தவருக்கு நிவேதிக்க விசேட சமையல் செய்யப்படும். இது "எட்டுச் சமையல்" "எட்டுப்படையல்" எனவும் வழங்கப்பட்டது. இறந்தவருக்கு விருப்பமான உணவுகள் நிவேதிக்கப்படும். சோறு கறி, பலகாரவகை, பானவகை, பழவகை யாவுமே இதில் விசேடமாக இடம் பெறும். சுருமீனும், கொழுக்கட்டையும் முக்கியமாகத் தேடிவைக்கும் வழக்கமுண்டு. இந் நிகழ்ச்சியில் துடக்கு உரிமையுள்ள நெருங்கிய உறவினர்களே சேர்ந்துண்பர். அன்று ஒரு படையலை நடுச்சந்தியிலே கொண்டு சென்று வைக்கும் வழக்கமும் சிறப்பாக இடம் பெறும். இறந்தவர் ஆவியுருவிலே அதனை வந்து உண்ணுவார் என்ற நம்பிக்கை மக்களிடையே பரவலாக இருந்தது (தொடரும்)

## வெடி.....

8ம் பக்கத் தொடர்

வெள்ளோட்டவிழாவை, சோழப்பேரரசன் கரிகால்வளவன் சார்பில் தளபதி மீகாமன் சம்பிரதாய முறைப்படி தொடங்கி வைப்பார்கள். பொறுமையாக இருங்கள்.

ஓவியர் சூடாமணி: தெய்வ வழிபாடு ஆகியவை முடிவுற்றதும் கப்பல் கடலில் தள்ளப்படும், கப்பல், குண்டர்களால், தரையில் தள்ளப்படும்போது, முதலில் பலகாரம், வாழைப்பழம், ஆகியவை வீசப்படும். பின்பு பொற்காசுகள் வீசப்படும். இவ் வேளையில் பெரியோர்கள், சிறியோர்கள், சண்டைபிடிக்காமல் மகிழ்ச்சியாக, சமாதானமாக, அவைகளைப் பொறுக்கி எடுங்கோ.

ஏகாம்பர ஆசாரியார்: கப்பலில் இருக்கும், தண்டேல்கள், பணியாட்கள் கப்பலில் பாட்டுப்பாடிய படியே இருக்கவேண்டும். கப்பல் கடலில், இலக்கியவுடன், கப்பல் குண்டர்களால் நீராட்டப்படும். அதே நேரத்தில் கப்பலுக்குள் இருந்தவர்களுக்கும நீராட்டப்படும் நீராடயாரும் மறுப்பின் குண்டர்களால், அவர்கள் தாழ்க்கடிக்கப்படுவார்கள் சரிதானே!

ஓவியர் சூடாமணி: பன்னீர்செல்வர! மதுக்கிண்ணத்துடன் நிற்கும், குண்டர்களே; பணம்குற்றி, மூதிரைக்குற்றி, பாலைக்குற்றி ஆகியனவகளை மிகவிரைவில் கொண்டுவந்து வைக்கும்படி; சோழ தளபதி மீகாமன் அதோ வருகின்ருர்! சனங்களே கைதட்டி வரவேருங்கள்.

மீகாமன் குதிரையில் பரிவாரங்களோடு வந்திறங்கி "செம்பியன் நாவாய்" கப்பலில் ஏறி, பாய்மர வாரியில் வைத்திருந்த தேங்காயை உடைத்து. கப்பல் பாய் மரத்தில் கட்டப்பட்டிருந்த புலிக்கொடியை ஏற்றி கப்பலை வாழ்த்துகின்ருர்.

எனது அன்பிற்குரிய பிரசைகளே! இந்த "செம்பியன் நாவாய்" என்ற கப்பலில்| கடலேறும் வெள்ளோட்ட விழாவுக்கு வருகை தந்த அனைவருக்கும் சோழப்பேரரசன் சார்பில் நன்றி கூறிக்கொள்ளுகின்றேன்

முற்றல் கனிகள் முறுவல் செய்யும் சோழநாட்டில், கொற்றவன், கரிகால் வளவனின் வணிகம், எட்டுத்திக்கும் பரவ வேண்டுமென வாழ்த்தி இந்த வெள்ளோட்டத்தை ஆரம்பித்து வைக்கின்றேன்

மங்கள வாத்தியங்கள் பல இசைக்க கப்பல் குண்டர்களால் தள்ளப்படுகின்றது. பலகாரம், பொற்காசு. வீசப்படுகின்றன கப்பல் கடலை அடைந்ததும், மக்கள் "செம்பியன் நாவாய் வாழ்க" எனக் கோஷமிடுகின்றனர். கடலில் சுக்கானையும், வாகுதடியையும் கப்பலில் பிணைத்த பிறகு. கூறைப்பாய் ஏற்றி கப்பல் வெள்ளோட்டம் விடப்படுகின்றது. அப்போது பீரங்கி பட்டாசுகள் வானைப்பிளக்கின்றது. (தொடரும்)

## மேடை.:

7ஆம் பக்கத்தொடர்

'சங்காரம்' நாடகத்தில் முக்கிய பெண் பாத்திரம் தாங்கி நடித்த பெண்மணி நடிக்கமுடியாத சூழ்நிலை ஏற்பட்டபோது, அப்பாத்திரத்தை சக நடிகநண்பர்களுடன் சேர்ந்து நடிக்க, தனது மனைவியை அனுமதித்து ஆற்றுப்படுத்தியவர். மௌனகுருவின் 'சங்காரம்' என்ற ஆடல் பாடல் நிறைந்த நவநாடகம் பேராதனை கொழும்பு உட்பட பல இடங்களில் பெரும் புகழ் ஈட்டியது. தேவை நோக்கி, கலை நோக்கு உந்த, தமது மனைவியை நாடக மேடையில் இட்ட பெருமைக்குரிய தேவராஜா முற்போக்குக் கலைஞன் தானே!

## நடிகர்க்குநான்கு வார்த்தைகள்

ஒவ்வொரு தொழிலுக்கும் பயிற்சி தேவை. நடிப்புக் கலைக்கோ கடும் பயிற்சி அவசியம். மற்றக் கலைகளை விட இது கடினமானது. வீணை வாசிப்பதற்கு வீணைக் கருவி; நடிப்புக்கலைக்கு கருவி அவனே!

கதாசிரியர் சொல்லும பாத்திரத்தை தன் கற்பனையால் மெருகூட்டி, பாத்திரத்துக்கு தேவையான படி தம் உடலை மாற்றி நன் தடையை மாற்றி, குரலை வேறுபடுத்தி ஒரு புதிய பிறவியாய் தோற்றுபவன் நடிகன். பாத்திரத்தின் பின்னே ஒழித்திருப்பவன் நடிக்கும் போதும் தன்னை நடிகன் உணர்கிருன். நடிப்பில் கட்டுப்பாடு, அளவு நிச்சயம் அவசியம்.

## ராணுவ...

3ஆம் பக்கத் தொடர்

சுழலுக்கு எம் அனைவரையும் இட்டுச் செல்வதுதான் மிகச் சாத்தியமாகத் தோன்றுகிறது. அத்தகு ஒரு சுழல் இலங்கையின் ஜனநாயக மரபிற்கு ஒரு சவாலாக, மிரட்டலாக மாத்திரமே அமையும். உங்கள் தேசம் சுதந்திரம் எய்தியது முதற்கொண்டு சிறப்புத் தேடித்தந்துள்ளது இம்மரபேயாகும்;

நான் இங்கு எழுப்பியுள்ள மனக்கிலேசங்களைக் கருத்திற்கொண்டு, இன்று சிங்களவரையும் தமிழரையும் பிரித்து வைக்கும் இச்சர்ச்சைக்கு ஒரு சமாதானமாகிய அரசியல் ரீதியான, நல்லிணக்கத்தின் பேரிலான தீர்வொன்றைக் காண்பீர்கள் என நம்புகிறேன்.

இங்ஙனம்,
அன்பார்ந்த,
ஜோன் கெறி

## உங்கள்.,

7ஆம் பக்கத்தொடர்

றிந்த மற்றவர்கள் அடியெடுத்துவைக்கத் தயங்கும் இடங்களுள் தன்மூப்பாகப் பாய்ந்திறங்குபவர் நீங்கள் அதன் விளைவு உங்கள் காதற் சம்பவங்கள் அநேகமாக மனோகரமான மனக்கிளர்ச்சியை உங்களுக்கு வாரிவழங்கும்.

## அவனது...

6ஆம் பக்கத்தொடர்

"நீங்கள் இமயமலைக்கு ஓடிஞலும் அவன் என்னைக் கொல்லாமல் விடமாட்டான்! விடவேமாட்டான்! அந்த மூட்டைப் பூச்சி உறுதியாகக் கூறியது.

'நீ ஏன் அப்படிச் சொல்கிருய்.?

ஓடிய மூட்டைப்பூச்சிகள் பயந்து நடுங்கிக்கேட்டன. அந்த மூட்டைப் பூச்சி கண்களை மூடிக் கொண்டு கூறியது; "நாங்கள் உறிஞ்சிக்குடித்தது அவனுடைய இரத்தம்".

## இலட்சிய...

5ஆம் பக்கத்தொடர்

தாள். அரிசிப் பெட்டியை இறக்கிவைத்து மடியிலிருந்த பத்து ரூபாய் நோட்டொன்றையும் எடுத்துக் கொடுத்துவிட்டுப் போனுள்.

அவள் கணவன் வீரன் கள் இறக்கி விற்ருன். 'அப்படி இப்படி' ஒன்றும் பணம் பரவாவிட்டாலும் வேலைக் கஞ்சியோடு உடுதுணிக்கும் குறைச்சலில்லை நல்லது கெட்டது என்று ஒரு காரியம் வரும்போது கொடுத்துதவ ஐந்து பத்து ரூபாயும் இருக்கிறது.

ஆனுல் தெய்வியோ......?

அவள் கலியாணஞ் செய்து ஐந்து வருஷங்களாகி விட்டன அவள் வாழ்க்கையிலே கண்ட முன்னேற்றமெல்லாம் மூன்று குழந்தைகளுக்குத் தாயாகி விட்டதைத் தவிர வேறென்று மில்லை. பிள்ளைப் பெற்ற பெண் தன்னைத் தேற்றிக்கொண்டு எழும்புவதற்கு வேண்டிய சாமான்கள் தான் ஒன்றும் இல்லை. என்றாலும் அதை அன்றன்று வாங்கப் பணமாவது வேண்டாமா?

குழந்தைகளுக்கு வேளா வேளைக்கு உணவுக்கு வழியில்லை. நல்ல அணிமணிகிடையாது. தலைக்கு வார்க்க எண்ணெய் கூட இல்லாததால் அவர்கள் பரட்டைத்தலைகளோடு திரிந்தார்கள்.

முருகன். மழையென்று வெயிலென்று பாராமல் நெஞ்சடித்து உழைத்து விட்டு ஒழிந்து வேளைகளிற் கூலிப்பிழைப்புக்குப் போனுன். உழைப்பாளிகளின் பரம்பரையிலே வந்த அவனுக்கு எந்தத் தொழில்தான் தெரியாது. வேலியடைப்பு, கதியால் வெட்டு, வீடு வேய்ச்சல்.........

திருவாளர் வேலுப்பிள்ளை வீட்டிலே கலியாண ஆரவாரம் அமர்க்களப்பட்டது. அவருடைய செல்வமகள் அன்னலட்சுமிக்குக் கலியாணம்.

வேலுப்பிள்ளை செல்வாக்குள்ள மனிதர். சிறந்த சமூக சேவையாளர், காந்திப்பக்தர். அந்தக்கிராமத்திலேயுள்ள சன சமூக நிலையத்தின் தலைவர். மது ஒழிப்புப் பிரசார சபையின் நிர்வாகசபை அங்கத்தவர்.

கலியாணம் வெகு ஆடம்பரமாக நடைபெற இருந்ததால் நண்பர்கள் உறவினர்கள் எல்லோரும் நேரத்தோடேயே வந்து கூடி விட்டார்கள். மணப் பெண்ணுடைய அண்ணன் முருகானந்தம் தன் மனைவி தேவியுடன். கொழும்பில் உள்ள தன் சிநேகிதர்களையும் கூட்டிக் கொண்டு வந்திருந்தான்.

அங்கே முருகனுக்கு வேலை கிடைத்தது. வேலுப்பிள்ளை முத்துப்பரியாருக்குத் தூரத்து உறவு எனவே பரியாரியாரின் சிபார்சின் பேரில். பந்தல் போடுவது, செத்தை அடைப்பதுபோன்ற வேலைகளைச் செய்யும் பொறுப்பு முருகனுக்குக் கிடைத்தது.

வெளிமுற்றத்தில் உள்ள வேலைகளை எல்லாம் முடித்து விட்டு, கோடிப் பக்கமாக விழுந்து கிடந்த செத்தையைச் சீர்பண்ணப் போன முருகன். அந்தப் பக்கமாக இருந்த அறையொன்றில் நாலைந்துபேர் இருந்து கும்மாளமடித்துக் கொண்டிருப்பதைப் பார்த்து திடுக்கிட்டுப் போனுன்.

அங்கே ஆண்களும் பெண்களுமாக இருந்தவர்கள் கொழும்பு நண்பர்கள்; அவர்கள் எந்தவித கூச்சநாச்சமுமின்றி விவஸ்தையுமின்றிக் குடித்துக் கொண்டிருந்தார்கள். ஆமாம் உயர்ந்தரகக் குடிவகைகள்.

முருகன்களும், தெய்விகளும் இலட்சிய நெருப்பிலே விழுந்து பொசுங்கிக் கொண்டிருக்கிருர்கள். முருகானந் தாங்களும் தேவிகளும் அதன் அனலிலே குளிர்காய்கிருர்கள்.

(நிலவிலே போவோம் 1956)

பழைய மாணவிகள் சங்க

பொதுக்கூட்டம்

இராமநாதன் கல்லூரிப் பழைய மாணவிகள் சங்கத்தினரால் 18-11-1985 திங்கட்கிழமை காலை 8-30 மணிக்கு சமாதி ஆலயத்தில் குருபூஜை அபிடேக ஆராதனைகளும், மாலை 2-30 மணிக்குச் சங்கப் பொதுக் கூட்டமும் நடாத்தப்படும். பழைய மாணவிகளின் ஆலோசனைகளும் ஆதரவும் தேவை.

அதிபர்.

தொழிற் பயிற்சிகள்

பின்வரும் பயிற்சிகளுக்கு 16—23 வயதுக்குட்பட்ட ஆண்களிடமிருந்து 25-11-85 இற்கு முன் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விவசாயம் ஒரு வருடம் கட்டணம் இல்லை.

2. வெல்டிங் 4 மாதம் கட்டணம் மாதம் ரூபா 400/-

(முழுப் பயிற்சிக்கும் ரூபா 1600/-)

இப் பயிற்சிகளுக்குத் தெரிவு செய்யப்படுவோர் நிலையத்தில் தங்கியிருத்தல் வேண்டும்.

தங்குமிடமும், உணவும் இலவசம்.

பயிற்சி முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

பணிப்பாளர்,
வை. எம். சீ. ஏ.,
இளைஞர் பயிற்சி நிலையம்,
பரந்தன்.

ஈழமுரசு

## சட்டவிரோத மின் பாவனையால் கிளிநொச்சியில் 13 பேர் மரணம்

சட்டவிரோத மின்சார பாவனையினால் அண்மையில் கிளிநொச்சிப் பகுதியில் சுமார் பதின் மூன்று பேர் உயிரிழந்துள்ளனர். மின்சாரத் தொடர்புகளை சரியான முறையில் கையாளாமையினால் ஏற்படும் ஆபத்துகளை சரிவர உணராத பாமர மக்கள் வாழும் உதய நகர், பொன்நகர் போன்ற கிராமங்களில் மக்கள் மிகச்சிறிய வயர்களை இடையிடையே முடிந்து தங்களின் சிறுசிறு குடிசைகளுக்குகூட மின்சாரத்தொடர்பு கொடுக்கின்றனர். வேலிகளுக்கூடாகச் செல்லும் இச்சிறிய வயர்களை சாதாரணமாக எவராலும் அவதானிக்க முடியாமலுள்ளது. இதனல் மக்கள் மிகப்பெரிய விபத்துக்களை எதிர் நோக்கவேண்டியுள்ளதாம்.

பயிர்ச்சேதம் 5 கோடி ரூபா:

# தமிழகத்தில் வெள்ளத்தால் 116 பேர் மரணமடைந்தனர்

(சென்னை)

கடந்த சில தினங்களாகப் பெய்தபேய் மழையினால் தமிழ் நாட்டில் உயிரிழந்தோர் தொகை நூற்றிநாற்பத்தாருக அதிகரித்துள்ளது. பரவலாக எல்லா இடங்களிலும் வீடுகள் பாதிக்கப்பட்டமையினாலும், சுவர்கள் இடிந்து விழுந்தமையினாலுமே இம்மரணங்கள் சம்பவித்துள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் உடனடி நிவாரணம் வழங்குதற்கான நடவடிக்கைகளைத் தமிழ்நாடு அரசு தீவிரமாகமேற்கொண்டு வருகின்றது. இதேவேளை தென் ஆர்க்காடு மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள விபத்தினால் பதினறு பேர் உயிரிழந்துள்ளனர்.

வெள்ளத்தினால் ஏற்பட்ட பயிர்ச்சேதம் சுமார் ஐந்து கோடி ரூபா வரையென மதிப்பிடப்பட்டுள்ளது. பல கட்டடங்கள் பலத்த பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

தஞ்சை மாவட்டத்தில் வெள்ள நிவாரணத்துக்கென ஐந்து கோடியே அறுபது இலட்சம் ரூபா தேவைப்படுகிறதென அறிவிக்கப்பட்டுள்ளது.

### அடகு கடையில்....

ன்றில் கடந்த 13ம் திகதிபுதன் கிழமை இரவு சுமார் முப்பத்தையாயிரம் ரூபா பெறுமதியான அடைவு நகைகளும் ரொக்கப்பணமும் இனந்தெரியாதவர்களால் கடை உடைக்கப்பட்டு களவாடிச் செல்லப்பட்டதாக கிளிநொச்சி பிரஜைகள் குழுவுக்கு புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடைவு நகைகளை மீட்பதற்காக ஒரு வாரத்துக்கு முன்னரே சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவிக்கப்பட்டு அவர்களால் கட்டப்பட்ட பணமும் அவர்களுக்குச் சொந்தமான நகைகளுமே களவாடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### முள்ளிய வளையில்....

ஆயுதப் படையினர் சுட்டதால காயமடைந்த இருவரும் தங்கள் வீட்டிற்குள் நின்ற போதே சுடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### ஆலாலு தர்மர்....

டணிப் பிரமுகர்களுமான திரு. மு. ஆலாலசுந்தரம், திரு. வி. தர்மலிங்கம் ஆகியோருக்கான அஞ்சலிப் பொதுக் கூட்டம் இன்று மாலை அராலி ஆகாயக் குளம் விநாயகர் ஆலய முன்றலில் நடைபெறும்.

### யாசிர் அரபாத்—

பாத் இந்தியாவிற்கு நாளை விஜயம் செய்யவுள்ளார். இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியுடன் அவர் பேச்சுவார்த்தைகளை நடத்துவார்.

### தொண்டமான்...

பேச்சுவார்த்தைகள் மூலமே தீர்வு காணப்படும். வன்செயல்களால் அல்ல என்று சொன்னர்.


# I. C. M. A
## [MAY '86]
### Commencing on 2nd Dec.'85

| | | |
|---|---|---|
| I. C. M. A - Section 'A' | (week-days) | 2-12-85 |
| Section 'B' | (week-ends) | 7-12-85 |
| Pr fessional Part I | (week-ends) | 7-12-85 |
| I. A. B. Foundation / Inter / Final | | 7-12-85 |

தகுதியும் திறமையும் நீண்டகால அனுபவமும் கொண்ட போதனையில் சாதனை புரியும் விரிவுரையாளர் குழு.

திருவாளர்கள்

V கருணநிதி, K P அரவிந்தன், ஜோய் டேவிட், S சிவபாலன், S. R. உதயணன், Mrs. S. மூர்த்தி

Cur course fee will be in consistent with hours of lecture

விபரங்களுக்கு

RAPID RESULTS INSTITUTE

212, Kachcheri - Nallur Road, Jaffna.

"GOOD WINE NEEDS NO BUSH"


### நல்லூர் பகுதியில்...

இம்சைகளுக்கு எதிராக போராடத்தயங்கி எமது வேண்டுகோளை நிராகரித்து விட்டன. இந்நிலையில் தனித்து நின்று அராஜகவாதிகளை மக்களுக்கு இனம் காட்டும் முயற்சியில ஈடுபட்டோம். இம்முயற்சியானது பல சந்தர்ப்பங்களில் அராஜகவாதிகளின் கொள்ளை முயற்சிகளை தடுத்து நிறுத்தியது. எனவேதான நாம் சக அமைப்புகளுடன் பேச விரும்பவில்லை. மக்களுடன் பேச விரும்புகின்ரும. மக்களே விடுதலை ஸ்தாபனங்களால் தமது சுய தேவைகளைச் சிறு உற்பத்திகளின் மூலம் தீர்க்கமுடியாது. பாரிய வேலைத்திட்டங்களோ அன்றி தொடர்ச்சியான நன்கொடைகளோ இல்லாமல் விடுதலை ஸ்தாபனங்கள் தம் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாது. எனவே ஏமாறுதீர்கள்! இனம் காணுங்கள்! தூக்கியெறியுங்கள்!

நேற்று முன்தினம் 16-11-85 அன்று இரவு 1 மணியிலிருந்து 3 மணி வரை நல்லூரில் எம் தோழர்களுக்கும், மற்றொரு இயக்கத்துக்குமிடையே கடும் மோதல் ஏற்பட்டுள்ளது. இதனை நாம் விரும்பவில்லை. ஆனலும் கொள்ளைகளைத் தடுத்து நிறுத்தும் பொருட்டு நம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளில் சில சமயம் இவ்வாறன சம்பவங்கள் தோன்றுவதுண்டு. ஆரம்பத்தில் வானில் வந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட குறிப்பிட்ட இயக்கத்தினர் நல்லூர் கந்தசுவாமி கோவிலில் உறங்கிக்கொண்டிருந்த பக்தர்களை கொச்சைத் தமிழிலும் சிங்களத்திலும் ஏசிக் கலைத்துள்ளனர். பின்னரே அவ்விடம் வந்த எம்தோழர்களுடன் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். எம்தோழர்களும் பதில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு இரண்டு மணித்தியாலங்களின் பின் அந்த இயக்கத்தினர் மீண்டு சென்று விட்டனர். இச்சம்பவமானது இரண்டு காரணங்கட்காக மேற்கொள்ளப்பட்டிருக்கலாம். ஒன்று எம்முடனன இயக்க மோதல்-மற்றையது நல்லூர் கந்தசுவாமி கோவில் கொள்ளை.

இதில் எம்முடனன இயக்க மோதலுக்கு நல்லூர் கோவிலிலுள்ள பக்தர்களை கலைக்க வேண்டிய அவசியமில்லை. மேலும் கொச்சைத்தமிழிலோ சிங்களத்திலோ பேச வேண்டிய அவசியமுமில்லை. எனவே நாம் இதனை நல்லூர் கந்தசுவாமி கோயில் கொள்ளை முயற்சியாகவே பார்க்கிறேம். எனவே தீர்மானிக்க வேண்டியது மக்களே. சிந்தியுங்கள்! ஏமாறுதீர்கள்! ஏமாற்ற அனுமதியாதீர்கள்! விழித்தெழுங்கள் - தூக்கியெறியுங்கள் அராஜகவாதிகளை!

## பஸ் விபத்தில் ஐம்பத்தைந்து சடலங்கள் மீட்கப்பட்டன

(சென்னை)

கடந்த சில தினங்களுக்கு முன் தொண்டியாற்றின் பெருக்கினல் தென் ஆர்க்காட்டு மாவட்டத்தில் ஆற்று வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்ட பஸ் வண்டியில்பயணஞ் செய்தோரில் ஐம்பத்தைந்து பேர்களுடைய சடலங்கள்இது வரை மீட்கப்பட்டுள்ளன.

இறந்தவர்களில் முப்பத்து ஏழு பேர் ஆண்கள் பதினைந்து பேர் பெண்கள் மூன்று குழந்தைகள். மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இவ்விபத்துக்குறித்து விசாரணைகளைத் தமிழ் நாடு அரசு மேற்கொண்டுள்ளது.

இறந்தவர்களின் இறுதிக் கிரியைகளுக்கான செலவையும் அரசு பொறுப்பேற்றுள்ளது. இறந்த ஒவ்வொருவரின் செலவுக்கும் ரூபா ஐந்நூறு ரூபாய் இதற்காக வழங்கப்படவுள்ளது.

### இரண்டு வாரத்தில்—

கரமாக மரணத்தைத் தழுவியுள்ளன.

இம்மாதம் 3-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அமிர்தாப் சிவநேசன் என்ற பத்துமாத ஆண் குழந்தையும், 12ம் திகதி செவ்வாய்க்கிழமை மோட்சராணி மனுவேல் என்ற மூன்று வயது பெண் குழந்தையும், நேற்று முன்தினம் செல்லத்துரை செல்லக்குமார் என்ற ஒன்றரை வயது ஆண்பிள்ளையும், நேற்று சிவாஜினி சுப்பையா என்ற ஒன்றரை வயதுப் பெண் குழந்தையுமே நோயினல் மரணமானவர்களாகும்.

சங்கிலியன் அகதிகள் முகாமில் ஐம்பது குடும்பங்களை சேர்ந்த இருநூற்றி நான்கு (204) பேர் இருப்பதாகவும் இவர்களில் சுமார் நூறு சிறுவர்கள் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### பல்கலைக்கழக

கழக வணிக / முகாமைத்துவ பரீட்சைகள் இன்று காலை ஒன்பது மணிக்கு நடைபெறும். பட்டபின் டிப்ளோமா பரீட்சைகள் 21ம் திகதி காலை ஒன்பது மணிக்கும், மற்றைய பரீட்சைகள் 20ம் திகதி முன்னர் குறிப்பிட்ட நேர அட்டவணைப்படியும் நடைபெறும்.

இப் பரீட்சைகள் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஹர்த்தால் காரணமாக ஒத்தி வைக்கப்பட்டன,

### வவுனியாவில் ....

யில் கடத்திச் செல்லப்பட்டதாகத் தெரியவந்துள்ளது.

கடத்திச் செல்லப்பட்ட ஆசிரியரின் பெயர் ஜெயரத்தின என்று தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக வவுனியா அரசாங்க அதிபர் திரு. கே. ஸி. லோகேஸ்வரன் விடுத்துள்ள வேண்டுகோளில், கடத்தப்பட்டவர்கள் எல்லா இனத்தவர்களுடனும், ஐக்கியமாக வாழ்ந்தவர்கள் எனவும், அவர்களை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்யுமாறும் கேட்டுள்ளார்.

இன்றுள்ள நிலையில் நாம் எமக்கிடையிலான மோதலையோ அன்றி மக்களை இம்சிக்கும் செயலகளையோ மேற்கொள்ளப்போவதில்லை. மேலும் அவ்வாறன செயல்கள் நடைபெறும் பட்சத்தில் தடுத்து நிறுததவும் தயங்க மாட்டோம். போராட்டத்தின் தன்மையை உணருங்கள் மக்களை ஏமாற்றுதீர்கள்''.

### அரியாலையில் இன்று சிகிச்சை

(அரியாலை)

சிறு பிள்ளைகளுக்கான வைத்திய சிகிச்சையும், நிறுத்தலும் இன்று 17ந் திகதி அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தில் பிற்பகல் இரண்டு மணி தொடக்கம் ஐந்து மணிவரை நடைபெறும்.

### தமது கோரிக்கை ...

சந்தேகப்படுவதில் உண்மையுண்டா?'' என்று ஒரு நிருபர் கேட்டபோது பிரதமர் அதனை முற்றாக மறுத்தார்.

இரு பகுதியினருக்குமிடையே இணக்கம் காணச் செய்து, அரசியல் தீர்வு பெறவே இந்தியா முயற்சிப்பதாகத் தெரிவித்த பிரதமர் தமிழீழ விடுதலை இயக்கங்கள் தங்கள் கோரிக்கைகள் என்னவென்பதையும், இன்றைய நிலையில் தங்களின் முடிவு என்னவென்பதையும் தெரிவிக்க வேண்டுமென்றும் சொன்னர்.

### வடபகுதி

12-40க்கு கொழும்பு கோட்டையை சென்றடையும்.

காங்கேசன்துறையிலிருந்து மருதானைக்கான உத்தரதேவி தினமும் காலை 8-00 மணிக்கு காங்கேசன்துறையிலிருந்து புறப்பட்டு மாலை 6 00 மணிக்கு மருதானை சென்றடையும்

கொழும்பிலிருந்து காங்கேசன்துறைக்கான இன்ரசிற்றி, யாழ்தேவி சேவைகளின் நேரங்களில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை.

இதேவேளையில் யாழ்ப்பாணத்திற்கும் கொழும்புக்கும் இடையேயான சகல ரயில் சேவைகளும் மறு அறிவித்தல் வரை நடைபெறமாட்டாது என யாழ். புகையிரத நிலையத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை யாழ்ப்பாணத்திலிருந்து யாழ்தேவி வழமைபோல் சென்றபோதிலும், கொழும்பிலிருந்து வந்த யாழ் தேவி அநுராதபுரத்துடன் நிறுத்தப்பட்டது.

### 4 பொலிஸ்....

டனை வழங்கப்பட்டிருந்தது.

இதனைப் பார்வையிட மூன்று வாகனங்களில் பொலிசார் சென்றபோதேகண்ணிவெடித் தாக்குதல் நடத்தப்பட்டது. முதலாவது ஜீப்பில் சென்ற சப் இன்ஸ்பெக்டர் ஒருவரும், நான்கு பொலிஸாரும ஸ்தலத்திலேயே பலியானுர்கள். மற்றிரு பொலிஸார் படுகாயத்துக்குள்ளாகி விசேட விமானத்தில் கொழும்பு கொண்டு செல்லப்பட்டனர்.

சுட்டுக் கொல்லப்பட்ட ஒன்பது தமிழரில், கிராமசேவகரான சேனதிராஜா (46), வங்கி ஊழியரான எஸ். வெள்ளையன் (45), ஆசிரியரான சி. மகாலிங்கம் (24) எம். தங்கராசா (77), வெ. முனியாண்டி (25), செ விமலரத்தினம் (30), ஆகியோரின் சடலங்களே அடையாளம் காணப்பட்டவையாகும்.

'ஈழமுரசு' சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 17-11-1985 ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336